MC.65/2025

09.10.2025

PW1 – சங்கீதா க/பெ,மோகன்ராஜ், வயது–39.

எதிர்மனுதாரர் ஆஜர்.

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 02.55 P.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் – 03.25 P.M.

Solemnly affirmed by Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathu in accordance with the provision of Act X of 1873 of the day of 09.10.2025

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-

ஊரைச் சார்ந்தவர்கள் என்றால் சரிதான். நீங்களும் எதிர்மனுதாரரும் திருமணம் செய்து கொள்ளாமலேயே ஒன்றாக வாழ்ந்து வந்தீர்கள் என்றால் சரிதான். நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள் என்றால் பீடி சுத்தும் வேலை பார்க்கிறேன். உங்களுக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே ஏற்பட்ட திருமண வைபவ செலவுகளை நீங்கள் தான் மேற்கொண்டதாக சொல்லுகிறீர்கள் எனவும் அந்த செலவினை நீங்கள் பீடி சுத்தும் வேளையில் சம்பாதித்ததா என்றால் ஆமாம். உங்கள் திருமணத்திற்கு பின்னிட்டு அந்த திருமணம் குறித்து ஊரில் உள்ளவர்களிடம் சொன்னீர்களா என்றால் சொன்னேன். உங்கள் திருமணத்தின் போது யார் யார் அதில் பங்கேற்றார்கள் என்றால் எங்கள் வீட்டினர் தான் திருமணத்தில் பங்கேற்றனர் எதிர்மனுதாரர் தரப்பிலிருந்து யாரும் வரவில்லை. எதிர்மனுதாரர் உங்களை திருமணம் செய்து கொள்வதற்கு முன்னரே கயல்விழி என்ற பெண்ணுடன் எதிர் மனுதாரருக்கு திருமணம் ஆனது என்றால் சரிதான். கயல்விழி தான் எதிர்மனுதாரரின் முதல் மனைவி என்றால் சரியல்ல. உங்கள்

திருமணத்திற்கு பின்னிட்டு நீங்கள் உங்கள் வீட்டில் தான் வசித்து வந்தீர்கள் என்றால் சரிதான். உங்களுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் எதிர்மனுதாரர் உங்கள் வீட்டிற்கு அவ்வப்போது தான் வருவார் என்று சொல்லி உள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். இரவில் வந்து மறுநாள் காலையில் கிளம்பி விடுவார். எதிர்மனுதாரர் கயல்விழி என்பவரை ஏற்கனவே திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து வரும் விபரம் உங்களுக்கு தெரியும் என்றால் தெரியாது. உங்கள் இருவரின் திருமண பந்தத்தின் வாயிலாக இரண்டாம் மனதாரர் பிறந்துள்ளார் எனவும் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் வரையிலும் உங்களையும் இரண்டாம் மனுதாரரையும் எதிர்மனுதாரர் தான் பராமரித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் எப்போதாவது உங்கள் செலவிற்கும் குழந்தையின் படிப்பு செலவிற்கும் எதிர்மனுதாரரை கேட்டதுண்டா என்றால் இல்லை. உங்களுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் எதிர்மறுதாரருக்கு 5 சவரன் தங்க நகையையும் ரூபாய் 5 லட்சம் நோக்கமும் கொடுத்ததாக சொல்லி உள்ளீர்கள் அதற்கு ஆதாரம் தாக்கம் செய்து உள்ளீர்களா என்றால் இல்லை. எதிர்மறுதாரருக்கு எதிராக அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லி உள்ளீர்கள் எந்த ஆண்டு அவ்வாறு புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் 2022. நீங்களும் எதிர் மனுதாரரும் எவ்வளவு காலம் கணவன் மனைவியாக வாழ்ந்த வந்தீர்கள் என்றால் 2008 முதல் 2022 வரையிலும் கணவன் மனைவியாக வாழ்ந்து வந்தோம். 2008 முதல் 2022 வரையிலும் நீங்கள் எதிர் மனுதாரருடன் வாழ்ந்து வந்த காலத்தில் அவ்வப்போது சிறு சிறு சண்டைகள் வரும் என்று சொன்னால் இல்லை எதிர்மனுதாரர் எப்போதாவது தான்

வருவார் இரவில் வந்துவிட்டு மறுநாள் காலை சென்று விடுவார். 2022 க்கு முன்னர் எதிர்மனுதாரருக்கு எதிராக எவ்வித புகார் நீங்கள் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். உங்கள் முதல் விசாரணை சாட்சியத்தில் எதிர்மனுதாரர் கேபிள் டிவி ஆபரேட்டராக பணிபுரிந்து மாதம் ரூபாய் 25,000 கூடுதலாக சம்பாதித்து வருகிறார் என்று சொல்லுவதற்கு ஆதாரம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. உங்கள் முதல் விசாரணை சாட்சியத்தில் எதிர்மனுதாரர் மேலும் 4 சக்கர வாகனம் வாங்கி விற்பதன் மூலம் ரூபாய் ஒரு லட்சத்திற்கும் கூடுதலாக சம்பாதித்து வருகிறார் என்று சொல்லுவதற்கு ஆதாரம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. உங்கள் முதல் விசாரணை சாட்சியத்தில் எதிர்மனுதாரர் சொந்தமாக நிலம் வைத்துள்ளதாக சொல்லுவதற்கு ஆதாரம் ஏதேனும் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் இல்லை. உங்கள் மனதிலும் முதல் விசாரணை சாட்சியத்திலும் எதிர் மனுதாரருக்கு குடும்ப சொத்தாக ஐந்து ஏக்கர் நிலம் உள்ளது அதில் விவசாயம் செய்து அதன்மூலம் ரூபாய் 3 லட்சம் வரை சம்பாதித்து வருகிறார் என்று சொல்வதற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. உங்களுடைய மனுவிலும் முதல் விசாரணை சாட்சியத்திலும் ஒரு பெண் குழந்தை உள்ளதாக சொல்லி உள்ளீர்கள் அந்த குழந்தை எந்த பள்ளிக்கூடத்தில் படித்து வருகிறார் என்றால் அரசு பள்ளியில் படித்து வருகிறார். நீங்கள் உங்கள் தாய் வீட்டில் இல்லாமல் தனியாக மடவாளத்தில் வசித்து வருவதாக எதிர்மனுதாரர் சொல்லுகிறார் என்று சொன்னால் சரிதான். உங்களுடைய சகோதரி பெயர் கீதா என்றால் சரிதான். எதிர்மனுதாரர் நீங்கள் உங்கள் தங்கை கீதாவின்

கணவர் சந்திரசேகர் என்பவருடன் தொடர்பில் இருப்பதாக எதிர்மனுதாரர் சொல்லுகிறார் என்று சொன்னால் அது தவறான சந்கதியாகும். எதிர்மனுதாரர் தரப்பில் நீங்கள் 2022 வரையிலும் எதிர்மனுதாரருடன் சந்தோஷமாகத்தான் வாழ்ந்து வந்தீர்கள் எனவும் உங்கள் தங்கை கணவர் சந்திரசேகர் உடன் பேச்சுவார்த்தை ஏற்பட்ட பிறகு தான் எதிர்மனுதாரரை புறக்கணித்து பின்னர் அவரை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் தரப்பில் குருடன் என்கிற வெங்கடேசன் என்பவருடன் கள்ளத்தொடர்பில் இருந்ததாக சொல்லி வருகிறார் என்று சொன்னால் அது தவறான சங்கதி ஆகும். எதிர்மனுதாரர் தரப்பில் நீங்கள் மடவாளத்தில் சந்திரசேகர் என்பவருடன் தான் வசித்து வருவதாக சொல்லுகிறார் என்று சொன்னால் அது தவறான சங்கதி ஆகும். எதிர்மனுதாரர் தரப்பில் உங்கள் குழந்தையின் படிப்பு செலவினையும் எதிர்மனுதாரர் தான் பார்த்து வருவதாக சொல்லுகிறார் என்று சொன்னால் தவறான சங்கதி ஆகும். எதிர் மனுதாரர் தரப்பில் நீங்கள் வெங்கடேசன் என்பவருடன் பேச்சு வார்த்தை வைத்துக் கொள்ளாமல் இருந்தால் தற்பொழுதும் உங்களை அழைத்துச் சென்று வாழ்வதாக சொல்லுகிறார் என்று சொன்னால் நான் வெங்கடேசன் என்பவருடன் பேச்சு வார்த்தையில் இல்லை. நீங்கள் எதிர் மனுதாரருடன் வாழ்வதற்கு தயாராக உள்ளீர்களா என்றால் நான் தற்போதும் தயாராக தான் உள்ளேன் அவர் அழைத்தால் செல்ல தயாராக உள்ளது.

எதிர்மனுதாரர் தரப்பில் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2025.10.09 16:42:37 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.